1992 ஏல்ரல் 2]. [மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்]

முற்பகல் 10–50

பிப்ரவரி மாதத்திற்குரிய சம்பளம் மார்ச் மாதம் 7 ஆம் தேதி தரப்பட வேண்டும். அதுதான் 26-3-1992 அன்று தரப்பட்டது. அதற்குக் காரணம் காசுக்கடன், மத்திய வங்கியிலிருந்து பெறுவதில் ஏற்பட்ட காலதாமதம்தான் என்பதைக் கோடிட்டுக் காட்டி மாண்புமிகு உறுப்பினர் அது குறித்த குறிப்புகளைத் தருவார்களேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்:

(1) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1977–78 மற்றும் 1978–79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின் மீது பொதுக்கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை பற்றிய பரிந்துறைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய முப்பத்தெட்டாவது அறிக்கை.

(2) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1983–84–ம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய பத்திகள் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த ஐம்பத்தேழாவது அறிக்கை (எட்டாவது பேரவை) மற்றும் இருபத்தேழாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவையில் மேலும் தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய முப்பத்தொன்பதாவது அறிக்கை.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) நுண்ணறிவுத் திறத் தொழில்கள்; வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள் பணித் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர். அரசினர் சட்டமுன்வடிவுகள். அறிமுகம் செய்தல், 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள் மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவு. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,